Volume 7 Issue 1 August 2025 E-ISSN: 2582-2063

# மானூர் பெயர்க்காரணமும் சுப்பிரமணியசாமி கோவில் தல வரலாறும்

**G. Chandrasekaran**
*Associate Professor, Head of the History Department*
*Devanga Arts College, Aruppukottai*

**முன்னுரை**

கோவில்கள் தமிழ்க் கலாச்சாரத்தின் அடையாளம் என்று கூறுவர். "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் பழமொழி. இக்கட்டுரையில் இடம் பெறும் மானூர் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி பார்த்திபனூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரில் சிறப்பு வாய்ந்த சுப்பிரமணிய சுவாமி (எ) முருகன் கோவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் முருக வழிபாடு பிரசித்தி பெற்றதாக அமைந்துள்ளது. ஏனெனில் இவ்வூருக்கு மிக அருகில் தென்பகுதியில் 2 கி.மீ தொலைவில் புகழ்மிக்க வீரக்குடி முருகன் கோவில் அமைந்துள்ளது. எனவே மானூர் குறித்து ஆய்வு செய்வது மிக முக்கியமானதாகும். இந்த ஆய்வுக் கட்டுரை மானூரின் பெயர்க்காரணம் மற்றும் இவ்வூரில் அமைந்துள்ள சுப்பிரமணிய சாமி கோவிலின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

**பாண்டியநாடு – வளநாடு**

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியம் வரையறை செய்யும் வடக்கே வேங்கட மலை தெற்கே குமரிக் கடலுக்கு இடைப்பட்ட பகுதியே தமிழ்நாடு. இப்பகுதியை சங்க காலத்தில் (கி.மு 300, கி.பி. 300)சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆட்சி செய்து வந்நனர். இவர்களில் முறையே சேரர் வர்சி சோழர் உறையூர் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நிலையில் பாண்டியர்கள் மதுரையைத் தலைநகராக் கொண்டு ஆட்சி செய்தனர். தற்போதைய சிவகங்கை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்கள் அனைத்தும் அக்காலத்தில் பாண்டிய நாட்டுப் பிரிவுகளிலே அடங்கும். சேர, சோழ, பாண்டிய அரசுகளில் பாண்டியர்களே முற்பட்டவர்கள் என்பதைக் கூறும் விதமாக "பாண்டியநாடே பழம்தி" என்கிறார் மாணிக்கவாசகர். இத்தகைய பெரும் நிலப்பரப்பினை ஆண்ட பாண்டிய மன்னர்கள் நிர்வாக வசதிக்காக கி.பி. 7ம் நூற்றாண்டுக்குப் பின் பாண்டிய நாட்டை பல வளநாடுகளாகப் பிரித்தனர். வளநாடு என்பது மாவட்டம் போன்ற ஆட்சிப் பகுதி. இந்த வளநாடுகள் பின்பு மேலும் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நாடு அல்லது கூற்றம் என அழைக்கப்பட்டது.

**காநையிருக்கை நாடு**

இவ்வாறான நாட்டுப் பிரிவுகளில்

- **அளற்று நாடு**– கமுதி, நீராவி, கரிசல்குளம், பரளச்சி, தொப்பலாக்கரை
- **பருத்திக்குடி நாடு**– திருச்சுழி, காரியாபட்டி (கிழக்குப்பகுதி) அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய ஊர்கள்.

**வெண்புநாடு**– அருப்புக்கோட்டை மற்றும் காரியாபட்டி (வடக்கு) உள்ளடக்கிய ஊர்கள்.

இன்றைய விருதுநகர் மாவட்டத்தின் பெருவாரியான கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. அந்த வகையில் காநையிருக்கை நாடும் இடம் பெறுகிறது. பாண்டியர்கள் காலத்தில் இந்த காநையிருக்கை நாடு என்ற பிரிவானது தெற்கே சாழநாடு வடக்கே பருத்திக்குடி நாடு கிழக்கே வெண்பு நாடு ஆகியவற்றுக்கிடையே அமைந்திருந்தது. கல்லுமடை, மானூர், மறையூர், இருஞ்சிறை, நரிக்குடி மானாமதுரை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைக் கொண்டதாக இருந்துள்ளது.

பாண்டியநாட்டின் பல்வேறு சமூக நிலப் பிரிவுகள் தோன்றியுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை ஏதேனும் ஊர் ஒன்றின் பெயரோடு நாடு என்ற பின்னொட்டுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. அது தவிர்த்து கூற்றம், முட்டம், வட்டம், இருக்கை, குளக்கீழ் உள்ளிட்ட பின்னொட்டுகளின் பெயராலும் பல சமூக நிலப்பிரிவுகள் தோன்றியுள்ளன. அவற்றில் குறைவான நீர்ப்பாசன வசதிகளை நம்பிப் பல ஊர்கள் தோன்றின அவை ‘‘இருக்கை’’ என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எ.கா. செங்காட்டிருக்கை, வல்லத்திருக்கை, காநையிருக்கை, அச்சங்காட்டிருக்கை. இந்த ‘‘இருக்கை’’ என்ற பின்னொட்டுடன் கூடிய பல ஊர்கள் விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் தோன்றியுள்ளது. இருக்கை என்ற பின்னொட்டுடன் கூடிய ஊர்கள் இம்மாவட்டங்களில் கண்டறிப்பட்டுள்ள பல்வேறு கல்வெட்டுகளில் காணப்படுகிறது. மானையூர் (மானூர்) கல்வெட்டிலும் காநையிருக்கை மானையூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து மானூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சில கிராமங்கள் காநையிருக்கை நாடு என்ற நாட்டுப் பிரிவின் கீழ் பாண்டியர்கள் ஆட்சிக்காலத்தில் ஆளப்பட்டு வந்துள்ளது. விவசாயமே இப்பகுதியின் முக்கியத் தொழில் கிருதுமால் நதி இப்பகுதியின் முக்கிய விவசாய நீராதாரமாக இருந்தாலும் பெரும் பாலான நிலப்பகுதிகள் நீர்ப்பாசன வசதி குறைந்த இடமாகவும் கிணற்றுப் பாசானம் மற்றும் பருவமழையை நம்பி விவசாயம் செய்யும் பகுதியாகவே பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளதை கல்வெட்டுச் செய்திகளின் மூலம் அறியலாம்.

**மானூர் பெயர்க் காரணம்**

ஒரு கிராமத்தின் பெயர்க்காரணத்தை அறிவதன் மூலம் அந்த ஊரில் வரலாற்றுக் காலம் ஊர் மக்கள், கலாச்சாரம், பாரம்பரியம் தொழில் உள்ளிட்டவை பற்றி அறிந்து கொள்ளலாம். அந்த வகையில் சிறப்புமிக்க கிராமம் மானூர் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி அருகே அமைந்துள்ளது அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் ‘‘மானையூர்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலப்போக்கில் மருவி மானூர் என்றானது. கல்வெட்டுகளில் மானையூர் என்று குறிப்பிடப்பட்டாலும், இவ்வூர் மக்களிடம் செவி வழிச் செய்தியாக காலங்காலமாக இருந்து வரும் தகவல்கள் சிறப்பானது. அது புராண கால நிகழ்வுகளுடன் தொடர்புள்ளதாக அமைந்துள்ளது. இவ்வூர் தமிழ்க் கடவுள் என்று அழைக்கப்படும் முருகன் வரலாற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. வள்ளி வேடர் குலத்தில் பிறந்து வளர்ந்து வருகின்றார். வள்ளியைக் கரம் பிடிக்க முருகன் வேடுவராக உருமாறி கானகம் வழியே வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அந்த வழியாக புள்ளி மான் ஒன்றைப் பார்த்தார். அதை பிடிக்க முயன்ற போது மான் ஓடியது, மானைத் துரத்திச் சென்றார் முருகன், அப்பொழுது வழியில் வள்ளியைக் கண்டார், அப்பகுதியே இன்று மானூர் என்று அழைக்கப்படுகின்றது. மானூருக்கு மரை என்றும் பெயருண்டு எனவே மரையூர் என்றும் இப்பகுதியில் ஓர் ஊர் உள்ளது. இது பற்றி மற்றொரு செய்தியும் மக்களிடம் பேசப்படுகிறது. அதாவது வள்ளியைக் கரம் பிடிக்கும் முன்பாக புள்ளிமானை இவ்வழியே முருகன் துரத்திச் சென்ற போது இவ்விடத்தில் மான் முருகனின் கண்களில் படாமல் மறைந்து சென்றதால் இவ்விடம் மறையூர் எனவும் அழைக்கப்படுவதாக கூறப்படுகிறது. வள்ளி-முருகன் திருமணத்தோடு இவ்வூர் தொடர்புடையதாக இதிகாச வழிச் செய்திகள் மக்களிடம் இன்றும் பேசப்படுகிறது. இந்த நம்பிக்கைக்குத் தகுந்தாற்போல் நரிக்குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்றும் முருக வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. மானூருக்கு தெற்கே 3 கி.மீ தொலைவில் பிரசித்தி பெற்ற வீரக்குடி முருகன் கோவில் அமைந்துள்ளது.

இதிகாசத்தோடு தொடர்புடைய செய்திகள் தவிர இவ்வூரின் பெயர் தாங்கிய கல்வெட்டும் இவ்வூரின் பெயர் பற்றிக் குறிப்பிடுகிறது. நரிக்குடியிலுள்ள விருப்பாட்சிநாத சுவாமி கோவிலில் காணப்படும் பிற்காலப் பாண்டியர்கால கல்வெட்டுக்களில் காணப்படும் கொடைச் செய்திகளில் ‘‘மானையூர்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மானூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கண்டறியப்பட்ட துண்டுக் கல்வெட்டுகளிலும் இவ்வூரின் பெயர் முழுமையாக நாட்டுப் பிரிவுடன் சேர்த்து ‘‘காநையிருக்கை மானையூர்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகு சிறப்பு பெற்ற

மானூரில் பிற்காலப் பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் விக்கிரம பாண்டிய விண்ணகரம் என்ற பெருமாள் கோயிலும் அனாகுலீசுவரமுடைய நாயனார் என்ற சிவன் கோயிலும் இருந்துள்ளது. இதன் மூலம் பிற்கால பாண்டியர் காலத்தில் இவ்வூர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஊராக இருந்திருக்க வேண்டும் என்று எண்ண முடிகிறது.

**சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் மூலவரலாறு**

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டிய மன்னன் கி.பி.1190 ல் காளையுிருக்கை மானையூரில் அனகுலேசுவரர் என்ற சிவாலயத்தை ஊரின் வடகிழக்குப்பகுதியில் அமைத்துள்ளார். இக்கோவில் கால செட்டத்தில் சிதிலமடைந்து அதனை வழிபாட்டிற்கு உகந்ததாக அல்லாமல் போனது.

**சுப்பிரமணியசுவாமி திருக்கோவில்**

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்ட சிவன் கோவிலின் சிதைந்த கற்களைக் எடுத்து வந்து மானூர் கிராமத்தின் வடக்கே சுப்பிரமணியசுவாமி கோவிலை அமைத்துள்ளனர்.

**வாய்மொழி வரலாறு**

இவ்வூரில் குடும்பர் இனத்தைச் சேர்ந்த வேலாயுதம் என்ற சன்னாசி ஒருவர் வாழ்ந்து வந்துள்ளார். இவர் கடவுள் பக்தியில் சிறந்து விளங்கியுள்ளார். இவர் அவ்வூரின் பெண் குழந்தை ஒன்றுக்கு ஏற்பட்ட தீராத காய்ச்சலை விபூதி கொண்டு கன நேரத்தில் குணமாக்கியுள்ளார். அதனைக் கண்ட ஊர் மக்கள் பிச்சை எடுத்து வாழும் வேலாயுதத்தின் செயலைக் கண்டு அனைவரும் தங்கள் குறைகளை கூறி அருள் பெறத் தொடங்கினர். அக்கால கட்டத்தில் கோவில் ஒன்றை கட்டுமாறு மதுரை திருப்பரங்குன்றம் முருகப் பெருமான் வேலாயுதம் கனவில் தோன்றி வேண்டுதல் விடுக்க அதை ஏற்று தன்னிடம் வரும் பக்தர்களிடம் கூற அனைவரும் சிரித்து நீயே ஒரு பிச்சைக்காரன் உன்னை முருகனே கோவில் கட்ட பணித்தாரா? என்று எள்ளி நகையாடினர். ஆனால் வேலாயுதம் அதனை சிறிதும் பொருட்படுத்தாமல் கோயிலை கட்டி முடிக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டார். தன்னை நம்புபவர்களை மட்டும் நம்பி வேலையைத் தொடங்கினார். அதன் முதல் நிகழ்வாக தன் கையில் இருந்த மரத்தடியை தற்போது அமைந்துள்ள கோவிலில் உள்ள கொடிமரம் இருந்த இடத்தில் நட்டு வைத்தார். அந்தத் தடி மறுநாள் காணும் போது வேலாக காட்சி தந்துள்ளது. அதன் பின்னர் ஊர் மக்கள் வேலாயுதத்தை நம்பத் தொடங்கினர். வேலாயுதம் பக்தர்களை கிருதுமால் நதியில் இருந்து கல் எடுத்து வருமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன்படி அனைவரும் கற்களை கொண்டு வந்து கொடுத்துள்ளனர்.

**விபூதியே ஊதியம்**

கோவில் திருப்பணியில் ஈடுபடுவோருக்கு வேலாயுதம் சுவாமி ஊதியமாக விபூதியை கொடுத்துள்ளார். அவர்களும் விபூதியைப் பெற்று வீட்டில் சென்று இடுப்பில் முடிந்த விபூதியை அவிழ்த்துப் பார்க்கும் போது தங்களின் வேலைக்கு ஏற்ற ஊதியம் அதில் இருந்துள்ளது. குறைவான கூலி இருந்தவர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்பதை உணர்ந்து சமமான உழைப்பைக் கொடுத்து சம ஊதியத்தைப் பெற்றனர். பக்தர்களிடமிருந்து காணிக்கையாக கற்களை மட்டுமே பெற்று கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலுக்கு வேறு எந்த ஒன்றையும் “காணிக்கையாக கொடுக்காதே” என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். கோவில் கட்டி முடித்தவுடன் ஏதோ காரணம் கருதி ஊரின் தற்போது மானூர் காலனி இருக்கும் ஊரின் எல்லைப் பகுதியில் உள்ள உடை மரத்தின் முள்ளின் மேல் படுத்து வாழ்ந்து வந்துள்ளார். இவரின் உணவிற்கு ஆட்டின் பாலை கரந்து அருந்தி வாழ்ந்து வந்துள்ளார். அந்த பால் ஈனாத ஆட்டிலும் கரந்து குடித்து வந்துள்ளார் என்பதும் செவி வழிக் கதையாக நம்பப்படுகிறது. வேலாயுத சித்தருக்கு அங்கும் இன்னல்கள் வர அவ்விடத்தின் தென்கிழக்கு இடம் பெயர்ந்து வசிக்கத் தொடங்கினார் அங்கு நிரந்தரமாக ஒரு

இருப்பிடமாகவும் தனது முருகனுக்கு கோவிலாகவும் அமைய வேண்டும் என்று கருதி ஒரு செங்கல் கட்டுமானத்தை உருவாக்கினார். ஆதில் ஒரு முருகன் சிலையை வைத்து வழிபட்டு வந்துள்ளார். மேலும் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு விபூதி மூலம் நோய்களை தீர்த்தும் அருள் வாக்கு கூறியும் தனது ஆன்மீகப் பயணத்தை செய்து வந்த வேலாயுதம் சித்தர் அவ்விடத்திலே ஜீவ சமாதியும் அடைந்துள்ளார். தற்போது அவர் கட்டிய வேலாயுதம் சுவாமி கோவிலை புனரமைத்து புதிதாக திருப்பணி செய்துள்ளனர் மானூர் பொது மக்கள்.

**மானூர் சுப்பிரமணியசுவாமி கோவில் சிறப்புகள்**

வேடனாக உருவெடுத்து மாய மானை தேடி வந்த முருகப் பெருமான் மானூரின் கானகத்தில் தேடி வந்து வள்ளியை கண்டதாகவும் மாய மான் மரையூரில் (மரை-மான்) மறைந்ததாகவும் அதன் காரணமாகவே மறையூர் என்று ஊரின் பெயர் அமைந்துள்ளதாகவும் செவி வழியாக குறிப்பிடுகின்றனர். மேலும் இங்கு வள்ளியை முருகன் மணமுடித்ததன் காரணமாக இப்பகுதி மக்கள் திருமணத்தின் போது வலதுபுறம் மணப்பெண்ணை அமர வைத்து மணமுடிக்கும் வழக்கமானது இடப்புறம் மணப்பெண்ணை அமர வைத்து திருமாங்கல்யத்தை கட்டும் பழக்கம் உருவாகியதாக நம்பப்படுகிறது.

**திருவிழா**

சுப்பிரமணிய சுவாமி கோவில் திருவிழாவானது பங்குனி மாதம் முருகப் பெருமானின் பிறந்த மாதத்தில் 10 நாட்கள் திருவிழா நடத்துகின்றனர். பத்து நாள் திருவிழாவில் 10 மண்டகப்படிகள் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையைச் சேர்ந்தவர்கள் திருவிழாவை நடத்துகின்றனர். முருகனுக்கு திருக்கல்யாணமும், தேரோட்டமும் நடத்துகின்றனர். தேரோட்டமானது பங்குனி உத்திரத்தன்று நடத்தப்படுகிறது.

**வேலாயுத சுவாமி கோவில் திருவிழா**

ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் முதல் செவ்வாய் கிழமையன்று கீரை பூஜை நடத்துகின்றனர்.

**கீரை பூஜை**

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் கீரை பூஜையானது வேலாயுத சித்திரை சாந்தப்படுத்த நடத்தப்படுவதாக மானூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**வேலாயுத சுவாமியின் சாபம்**

வேலாயுத சித்தர் வாழும் நாட்களில் அவருக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு மனம் நொந்து இப்பகுதி மக்களுக்கு ஒரு சாபத்தை வாக்குச் சொல்லி மறைந்துள்ளார். அவ்வாக்கானது ‘‘முப்போகம் விளைந்தாலும் மோருக்கு விதியத்துப்போகும்’’ என்று கூறியுள்ளார்.

**அன்னதானம்**

இவ்வாக்கை போக்க கீரை பூஜை நடத்தி ஏழை எளியோர்களுக்கு அன்னதானம் கொடுத்து சித்தரின் சாபத்திற்கு விமோச்சனம் தேடி வருவதாக ஊர் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது இச்சாபம் நீங்கி இப்பகுதி வளம் பெற்று வருகிறது என்றும் வேலாயுதம் சித்தர் இன்றும் அருள் வழங்கி வருகின்றார் என்பதை நம்புகின்றனர். இவ்வேலாயுதம் சுவாமி திருக் கோவில் திருப்பணி செய்து 10.06.2024 அன்று கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

**முடிவுரை**

நேரடிக் களஆய்வு மற்றும் துணைமை ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ள இந்த ஆய்வுக் கட்டுரையானது மானூர் கிராமத்தைப் பற்றி வெளிவரும் முதல் கட்டுரை ஆவணம் ஆகும். மானூரின் பெயர்க்காரணம் பற்றியும் கோவிலின் மூல வரலாறு பற்றியும் வாய்மொழிக் கதைகளுடன் கூடிய வழக்காறுகள் சரியாக எடுத்தாளப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. சீதாராம் குருமூர்த்தி - விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை - 2008.
2. போ.இராசேந்திரன், சொ.சாந்தலிங்கம் - வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம், பாண்டியநாட்டு வரலாற்று ஆய்வு மையம் - 2014.
3. தொ. பரமசிவன், அழகர்கோயில், நற்றிணை பதிப்பகம் - 2022.
4. சொ. ஸ்ரீதர், சி. செல்லப்பாண்டியன் - விருதுநகர் மாவட்ட தொல்லியல் தடயங்கள், பாண்டியநாடு பண்பாட்டு மையம் - 2024.
5. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும் பேரும் - ஸ்ரீ செண்பகா பதிப்பகம் - 2011.
6. நேர்காணல், இரா.தாமரைக்கண்ணன்-வரலாற்று ஆய்வாளர் - வீரசோழன்.